REGD. NO. M. 6911 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
[ஏப்ரல் முதல் தேதியிலிருந்து]
★
தனி இதழ் 7 நயா பைசா
மூன்று மாதம் ரூ. 6
ஆறு மாதம் ரூ. 12
ஒரு வருடம் ரூ. 24
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 12உ திங்கள் (25—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 13உ செவ்வாய் (26—3—57) [இதழ் 245

பாதுகாப்புத் துறையில் இந்தித் திணிப்பு பூர்த்தி

தேர்தல் சந்தடிக்கிடையே டெல்லி தரும் செய்தி

மகாவீர் தியாகியின் மகத்தான சாதனையாம்

அரசியல் சட்டவிதி அவமதிக்கப்பட்டிருப்பதற்கு மற்றுமோர் சான்று

தேர்தல் முடிவுகளின் பக்கம் மக்கள் தங்கள் கவனத்தைத் திருப்பியிருக்கும் நேரத்தில் டில்லிப் பட்டணத்திலிருந்து ஒரு செய்தி தரப்பட்டிருக்கிறது.

அதுதான் பாதுகாப்புத் துறையில், இந்தித் திணிப்பு பூர்த்தியாகிவிட்டது என்ற செய்தி.

பாதுகாப்பு இலாகா மந்திரியான மகாவீர் தியாகியின் பெருமைக்குரிய சாதனை என்று மகிழ்ச்சியோடு அனுப்பப்படும் அந்தச் செய்தி, 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலமே தொடர்ந்து இருக்கும், வேண்டுமானால் இந்தியும் கூடச் சேர்த்து உபயோகிக்கப்படலாம் என்ற அரசியல் சட்ட விதி, மூர்க்கத்தனமாக மீறப்பட்டிருப்பதையும் கூறுகிறது.

பத்திரிகைகளுக்கு டில்லி சர்க்கார் விடுத்துள்ள குறிப்பு ஒன்று இராணுவத்தில் தினசரி உபயோகிக்கப்படும் வார்த்தைகள் அனைத்தையும் இந்தி மயமாக்கும் வேலை முடிந்துவிட்டது' என்று கூறுகிறது.

'நோட்டீசுகள், குறிப்புப் பலகைகள் மற்றும் கடற் படையில் உபயோகிக்கப்படும் வார்த்தைகள், அணிவகுப்பில் பயன்படுத்தப்படும் சொற்கள் அத்தனையும், இந்தி மயமாக்கப்பட்டுவிட்டன. இறுதியாக இது குறித்துச் செய்யவேண்டியிருந்த வேலைகளை, பாதுகாப்பு மந்திரி மகாவீர் தியாகி செய்து முடித்துவிட்டார்' என்றும், அந்தச் செய்தி கூறுகிறது.

'இந்திய அரசு திவாலாகிவிடும்'

நிதிக்குழுத் தலைவர் எச்சரிக்கை!

சென்னை, மார்ச் 25—

"மாநிலங்கள் தங்கள் பட்ஜெட்டுகளை சரிக்கட்டவேண்டும். இப்போது மாநிலங்கள் துண்டுவிழும் பட்ஜெட்டுகளை தயாரிக்கின்றன. இறுதியாக இந்தப் பற்றுக்குறையை ஈடு செய்ய மத்திய அரசின் உதவி தேவைப்படும். இப்படி பெரிய தொகைகள் கொடுக்க நேரிட்டால் மத்திய அரசு திவாலாகி விடும். ஏற்கனவே திட்டத்தின் செலவிற்கு அதிக வரிகள் போடவேண்டியுள்ளது. எனவே அடுத்த 5 ஆண்டு காலத்திற்கு மாநிலங்கள் பட்ஜெட்டுகளை சரிக்கட்டத்தான் வேண்டும். ஒப்புக்கொண்டவாறு வரிகளைப் போட்டு வசூலிக்கத்தான் வேண்டும்" என்று நிதிக்குழுத் தலைவர் திருபார்களிடம் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

வடநாட்டுக்குப் பின்லாந்து உதவி!

புதுடில்லி, மார்ச் 21—

பஞ்சாபில் உள்ள பியாஸ் பகுதியில் மரவேலைத் தொழில் முன்னேற்றத்திற்காக, தொழில் நுட்ப உதவியளிக்க பின்லாந்து நாடு முன்வந்துள்ளதாம்.

இந்தியக் காப்பி, சர்க்கரை, கச்சா மாட்டுத்தோல், கச்சா புகையிலை முதலியவைகளுக்குப் பின்லாந்தில் நிறைய கிராக்கி இருப்பதாகப் பின்லாந்து தூதுக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பேசாத பகுதிகளில் இந்தியைத் திணிக்க!

புதிய இந்தி ஆசிரியர்கள் நியமனம்

புதுடில்லி, மார்ச் 22—

முக்கியமாக இந்தி பேசப்படாத பிரதேசங்களில் இந்தியைப் 'பரப்பு'வதற்கான ஒரு நடவடிக்கையாக, பல்வேறு மாநிலங்களிலும் 190 இந்தி ஆசிரியர்களை நியமிப்பதற்காக மத்திய சர்க்கார் நடப்பு நிதி ஆண்டில் இதுவரையில் மொத்தம் ரூ. 39,895 அனுமதித்துள்ளனராம். மாநிலவாரியாக ஒதுக்கப்பட்டுள்ள தொகை விவரம் வருமாறு:—

மாநிலம்	தொகை ரூ.	நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள்
ஒரிசா	3,762/-	30
திரிபுரா	3,355/-	11
ஆந்திரப் பிரதேசம்	17,800/-	77
பம்பாய்	8,978/-	43
மைசூர்	6,000/-	29

மத்திய திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிற இந்நிதி உதவி இந்தி பேசப்படாத பிரதேசங்களிலுள்ள உயர்தரப் பள்ளிகளில் இந்தி ஆசிரியர்களை நியமிப்பதற்காக மத்திய சர்க்காரால் மாநில சர்க்கார்களுக்கு வழங்கப்படுகிறதாம்.

காஷ்மீர்: நேரு - ஜாரிங் பேச்சுவார்த்தைகள்

இந்தியத் துருப்புகள் வெளியேற வேண்டும் என்கிறார் பாக். பிரதமர்

பெவான் கருத்து என்ன?

காஷ்மீர் விவகாரத்தில், இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு முடிவு காணுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குன்னார் ஜாரிங், இன்று புதுடில்லி வந்து, பண்டித நேரு, கிருஷ்ணமேனன் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளைத் துவங்கியுள்ளார்.

வெளி விவகார இலாகா செயலாளர், என். ஆர். பிள்ளை, மற்றும் காமன்வெல்த் இலாகா செயலாளர் எம். ஜே. தேசாய் ஆகியோரும், பேச்சுவார்த்தைகளின் போது உடனிருந்திருக்கின்றனர்.

★

நேருவே! வெளியேறுக!

கராச்சி கூட்டம் ஒன்றில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தி, 'நேரு பண்டிதர் அவர்களே! இந்தியத் துருப்புகளை காஷ்மீரத்திலிருந்து திரும்பப் பெறுக. இந்த விவகாரத்தில் பாகிஸ்தானுடன் ஒரு யோக்கியமான முடிவுக்கு வருக! என்று பேசியிருக்கிறார்.

விரும்பினால்

"காஷ்மீர் நிலையில் மாற்றம் ஏற்பட்டால் இந்தியாவில் கலகம் தோன்றும் என்று கூறியிருக்கிறார் பண்டிதர். அதாவது இந்தியாவில் உள்ள முஸ்லீம்களை அச்சுறுத்துகிறார், பண்டிதர்.

"ஆனால், காஷ்மீரை இந்தியா பலாத்காரமாக ஆக்கிரமித்திருந்தபோதும்கூட பாகிஸ்தானில் ஒரு இந்துகூட கொல்லப்பட்டதில்லையே! பாகிஸ்தானில் உள்ள இந்துக்கள் மீது எங்களுக்கு விரோதமோ குரோதமோ கிடையாது. பாகிஸ்தான் குடிமக்களாயிருக்கும் வரை அவர்களது உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்புத் தரவேண்டியது எங்கள் கடமையாகும்"

என்றும், சுராவர்த்தி கூறியிருக்கிறார்.

மேலும் 'நேரு விரும்பினால், இந்தியாவில் கலகங்கள் கிளம்பும்; விரும்பாவிடின் தோன்றாது' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ரஷ்யாகூடச் சொல்லவில்லையே!

'உலகம் முழுவதும் காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் பக்கம் நிற்கிறது. ரஷ்யாகூட பாதுகாப்புச் சபையில், காஷ்மீர் இந்தியாவின் பகுதி என்று கூறவில்லையே' என்றும் கூறினாராம் சுராவர்த்தி.

பெவான் கருத்து

'காஷ்மீர்பற்றி இந்தியாவிற்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என்றநிலை ஒரு காலத்தில் பிரிட்டனில் நிலவியதுண்டு. ஆனால் அந்தநிலை இப்போது மாறியிருக்கிறது. காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் நிலையை பிரிட்டன் இப்போதுதான் நன்கு உணர்ந்து வருகிறது' என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் பெவான் கூறியிருக்கிறார்.

அவர் புதுடில்லிக்கு பண்டிதரின் விருந்தாளியாக வந்துள்ளார்.

விற்பனை வரி விகிதம் மாறுதாம்!

சென்னை, மார்ச் 22—

1955-ம் ஆண்டு இந்திய நாணயத் திருத்தச் சட்டம் இவ்வாண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வருகிறது. தசாம்ச நாணய முறையால், தற்போது அமலிலிருக்கும் விற்பனை வரிச் சட்டத்தின்படி விற்பனை வரி விகிதம் 1-9/16 விகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக உயர்த்த வேண்டிவரும். ஆனால் தற்போது விதிக்கப்படும் விற்பனை வரி விகிதத்தை மாற்றுவதில்லை என சர்க்கார் முடிவு செய்துள்ளது.

காங்கிரஸ் ஆட்சியில் குடும்பமே தற்கொலை!

கடன்தொல்லை தாளாதோர் கோர முடிவு

திருநெல்வேலி, மார்ச் 23—

ஏழ்மையும், பெரும் கடன் தொல்லையும், ஒரு குடும்பத்தையே பலிகொண்ட சம்பவம், இங்கு நிகழ்ந்திருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் வாழும் நிலையின் விளக்கம் கூறும், அச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

'போஸ்ட் மாஸ்டர்'

கருங்குளம் கிராமத்து போஸ்டு மாஸ்டர், மீனாட்சிசுந்தரம் (முதலியார்) என்பவர்.

அவர் குடும்பமோ, ஐந்து நபர்களைக்கொண்ட ஒன்று. கடன் தொல்லைகள் தாளவில்லை; ஏழ்மை வாட்டுகிறது; என்செய்வார் பாவம்!

தற்கொலைக்கு ஒப்பந்தம்

நாம் வாழ்கிறோம் என்ற பெயரில் தினம் கொஞ்சம் கொஞ்சமாகச் சாவதைவிட, சுருக்கமாகச் செத்துவிடலாம் என்று, தன் மனைவி, 19 வயதான மகள் ஆகியோருடன் அவர் ஒரு தற்கொலை ஒப்பந்தமும் செய்துகொண்டாராம்.

முறையே 13, 5 வயதான ஆண் குழந்தைகள் இரண்டையும் கழுத்தை நெறித்துக் கொன்றுவிடுவது என்பதும் ஒப்பந்தத்தின் மற்றொரு பகுதியாம்.

இதனை, அவர்கள் வீட்டிலிருந்த 5 பிணங்களையும் கண்டபோது போலீசார், கூடவே கண்டெடுத்த கடிதம் கூறுகிறது.

49 வயதான மீனாட்சிசுந்தர (முதலியார்), 43 வயதான அவர் மனைவி முத்துலட்சுமி அம்மாள், 19 வயதான சிதம்பரநாயக மணியம்மாள் என்ற அவர் மகள், முறையே 13, 5 வயதான கிருஷ்ணராயன், பகவதிநாதன் என்ற ஆண் மக்கள் ஆகிய ஐந்துபேரும் தான், வறுமை, கடன் தொல்லை இவற்றால், சாவுக்குத் துரத்தப்பட்ட 'பாக்கியவான்'கள் என்று கூறப்படுகிறது.

வேலை நிறுத்தம் நின்றது

பிரிட்டிஷ் கப்பல் கட்டும் தொழிலாளர் நிறுவனங்களுக்கும், நிர்வாகத் துறைக்கும் ஏற்பட்டிருந்த தகராறில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

நம் நாடு

சென்னை 25—3—57 திங்கள்

ஏற்றுக் கொள்வாரா?

காங்கிரசுக் கட்சிக்கு அடுத்த நிலையில் பலம் பொருந்திய கட்சியாக அமைப்பு முறையுடன்கூடி விளங்குவது திராவிட முன்னேற்றக் கழகமேயாகும் என்று, ஆர். வி. கிருஷ்ண அய்யர் மதிப்பிட்டுக் கூறியுள்ளார். அவர்போன்றேதமிழகப்பொதுவுடைமையர்களும், 'பலத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டோம்' எனக் கூறிக்கொள்ளும் வகையில் முன்னேற்றக் கழகத்தின் உண்மையான பலத்தை ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதுபோன்றே, பேராசிரியர் இரத்தினசாமி அவர்களும், தேர்தல் மூலம் வெளிப்பட்ட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றலை சிறப்பித்துக் கூறியுள்ளார்.

ஆனால் காமராசர் அவர்களோ, மக்களிடம் முன்னேற்றக் கழகத்திற்குள்ள பேராதரவை ஒப்புக்கொள்ள விரும்பாது, தேர்தல் காட்டும் பாடத்தையும் காண மறுத்து, கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குகள் அனைத்தும் காங்கிரசு எதிர்ப்பு வாக்குகளே யல்லாது கழகக் கோட்பாட்டிற்கு உடன்பாடு கொண்டதல்ல என விதண்டாவாதம் பேசியுள்ளார். அவர் விதண்டா வாதத்தில் உள்ள நியாயா நியாயத்தை ஆராய்வோம்.

காங்கிரசுக் கட்சியின் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள அபேட்சகர்களில் தொண்ணூற்று ஒன்பது சதவிகிதத்தினர் எவ்வாறு வெற்றி பெற்றுள்ளனர், அவ்வெற்றியைப் பெறுவதற்காக அவ்வபேட்சகர்கள் தனித்தனியாக சொந்தத்தில் செலவழித்துள்ள தொகை எவ்வளவு, அதற்காக காங்கிரசுக் கட்சி சார்பில் செலவழிக்கப்பட்டுள்ள பெருந்தொகைஎவ்வளவு, என்ற உண்மைகளை நாட்டு மக்கள் அறிந்தே உள்ளனர். அவர்களைவிட, வெற்றிபெற்றுள்ள காங்கிரசு அபேட்சகர்கள் மிக மிகத் தெளிவாகவும், புள்ளிவிவரத்தோடும் அறிந்து கொண்டுள்ளனர்.

வெற்றி பெற்றுள்ள தொண்ணூற்று ஒன்பது சதவிகித காங்கிரசு அபேட்சகர்களும் பெற்றுள்ள வாக்குகள், ஒழுங்கான—அறவழியில் பெறப்பட்டதேயாகாது. சாதி, அதிகாரம், பணம் ஆகிய மூன்றின் மூலமும், உருவாகக்கூடிய அச்சத்திற்கும் ஆசைக்கும் மயக்கத்திற்கும் மக்களை ஆளாக்கிப் பெறப்பட்டவைகளேயாகும். இம் மறைக்க முடியாத உண்மையை வெற்றி பெற்றுள்ள காங்கிரசு அபேட்சகரையும்விட, முதல் அமைச்சர் காமராசர் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டிருக்கின்றார்.

எனவே, இந்தத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்துள்ள வாக்குகளில் தொண்ணூறு சதவிகிதம், காங்கிரசுக் கோட்பாட்டில் தங்களுக்குள்ள பற்றுதலால் வாக்காளர்களால் தரப்பட்டதல்ல என்றே எவரும் முடிவு கட்டிக்கொள்ளலாம். நிற்க,

தமது காங்கிரசுக் கட்சிக்கு வெற்றி தேடி இருக்கும் இலட்சணம் இத்தகையதாக இருப்பதினாலோ என்னவோ, இந்த அவலட்சணத்தைத் தாம் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கும் காரணத்தினாலோ என்னவோ கனம் காமராசர் நமது கழக அபேட்சகர்களுக்கு ஆதரவுகாட்டிய வாக்காளர்களை, கழகப் பற்றற்ற காங்கிரசு எதிர்ப்பாளர்கள் எனப் பொதுப்படையாகக் கூற முன்வந்துள்ளார் போலும்!

தேர்தலில் நமது கழக அபேட்சகர்களுக்கு ஆதரவு காட்டிய வாக்காளர் அனைவரையும், கழகப் பற்றற்றவர்கள் எனக் கூறுவதுடன் அவர் இருந்துவிடவில்லை. அவர்கள் அனைவரும் காங்கிரசு எதிர்ப்பாளர்கள் என்றும் அவர் ஒளிவு மறைவு இல்லாமல் ஒப்புக்கொள்கிறார்.

அதுவுமன்றி, கழகம் வெற்றி பெற்றுள்ள இடங்களில் மற்றக் கட்சிகளைவிட கழகம் பலம் பொருந்தியதாக இருந்ததால், அக் காங்கிரசு எதிர்ப்பு வாக்குகளை நமது கழகத்தால் பெற்று வெற்றி பெற முடிந்தது என்றும் அவர் விளக்கம் தருகிறார். நல்லவேளை நமது கழகம் பெற்றுள்ளதே சட்டப்படி வெற்றி ஆகாது எனக் கூறாது, நமது கழகம் வெற்றிபெற்றுள்ள இடங்கள் வரையிலாவது காங்கிரசு எதிர்ப்பு வாக்குகளைப் பெறக் கூடிய அளவு நமது கழகத்திற்கு பலம் இருந்திருப்பதாக தாராளபுத்தி காட்டி கனம் ஒப்புக்கொள்ள முன்வந்தாரே, அதுவே நாம் பெற்ற பெரும் பேறுதான்!

காங்கிரசு எதிர்ப்பாளர்களாக மட்டுமே, முதலமைச்சர் கூறுவது போன்று, கழகத்தவரை ஆதரித்த வாக்காளர்கள் இருந்திருப்பார்களானால், கழக அபேட்சகர்களை ஆதரிக்க அவர்கள் முன் வருவது எப்படி சாத்தியமாகும்? தேர்தலில் போட்டியிட்ட மற்ற அபேட்சகர்களை ஏன் அவர்கள் ஆதரிக்க மறுத்தனர்? என்ற வினாக்களுக்கு விடை முதலமைச்சர் தான் கூறவேண்டும். நிற்க.

நமது கழகத்தவர் வெற்றியைக் குறித்து காமராசர் தந்துள்ள விளக்கத்தில் மூன்று உண்மைகள் அடங்கி யுள்ளன.

- காங்கிரசை எதிர்க்கும் மக்கள் இருக்கின்றார்கள்.
- சிற்சில பகுதிகளில் முன்னேற்றக் கழகம் பலத்துடன் விளங்குகிறது.
- முன்னேற்றக் கழகம் பலத்துடன் விளங்கும் பகுதிகளில் மற்ற அரசியல் கட்சிகள் பலம் குறைந்து இருக்கின்றன.

நமது கழகத்திற்குக் கிடைத்துள்ள வெற்றியைக் குறித்து, முதலமைச்சர் காமராசர் வெளியிட்டுள்ள மதிப்பீட்டிலிருந்து மேற்படி மூன்று உண்மைகள் வெளியாகின்றன. தாம் உணர்ந்து கூறியுள்ள இவைகளையாவது, இனி அவர் ஏற்றுக்கொள்ளுவாரா? அல்லதையும் காலப் போக்கில் மறந்துப் பேசக் கிளம்புவாரா? காலம் தான் பதில்தர வேண்டும்!

தோல்விகள் தோற்றுவிக்கும் இன எழுச்சி

வெற்றிகளை ஈட்டித்தர வல்லன

வெற்றிபெற்ற அன்பழகன் முழக்கம்

"நான் வெற்றி பெற்றுவிட்டேன் என்றும் திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தோற்றுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. நான் பெற்ற வெற்றியிலேயும் தோல்வி கலந்து இருக்கிறது—அவர் பெற்ற தோல்வியிலேயும் வெற்றி கலந்திருக்கிறது. இப்படித் தோல்வியும், வெற்றியுமாகக் கலந்த நிலைதான் இன்று நிலவுகிறது. திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் என்னுடைய தலைவர்—நான் தலைவராகக் கொண்டிருக்கிற அண்ணு அவர்கள்கூட சிறிது காலம், பாலசுப்பிரமணியம் அவர்களிடம் சீடராக இருந்திருக்கிறார். பாலசுப்பிரமணியம் அவர்கள் பலமுறை தேர்தலில் தோற்று இருக்கிறார் என்றால், அது அவருடைய குற்றமல்ல—இந்த நாட்டு மக்களுடைய குற்றம். அவரும் தோற்றால் துவண்டுவிடுபவரல்ல. அவர் பெற்ற பல தோல்விகள் தான், இன்று என்போன்றவர்கள் வெற்றிபெறுவதற்குக் காரணமாக யிருந்திருக்கிறது. பாலசுப்பிரமணியங்கள், பலதடவை தோற்றதால் ஏற்பட்ட இன எழுச்சியும், விழிப்புணர்ச்சியும்தான், இன்று அன்பழகனை சட்ட மன்றத்திற்கு அனுப்புகிறது."

—என்று தோழர் க. அன்பழகன் அவர்கள், 22—3—57 மாலை சென்னை—எழும்பூர் ஒயிட் மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் சொன்னார்:—

"தேர்தலிலே மாற்றார்கள் கையாளப்பட்ட தில்லுமுல்லுகளை நாமறிவோம். நம்முடைய சீட்டு கொண்டு போனவர்களுக்கு ஓட்டு இல்லை என்று சொல்லுவதும், காங்கிரஸ் கட்சியின் சீட்டு கொண்டு போனவர்கள் உடனே ஓட்டுப் போட்டுவிட்டு வந்த விந்தையையும் கண்டோம். அதிகாரிகளிலே, மிக மேல் தட்டிலே இருந்தவர்கள், கண்ணியத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்து கொண்டார்கள். ஆனால் படிகுறைய குறைய சிறுசிறு அதிகாரிகள்—சில்லறை அதிகாரிகள் தமக்கு நிறைய தொல்லை கொடுத்து ஒரு தலைப்பட்சமாக நடந்துகொண்டார்கள். இதற்கு உடந்தையாக, சட்டமும் அநியாயமாக இருந்தது. வரும் ஆண்டுகளில், நான் இதுபோன்ற சட்டங்களில் உள்ள சந்து பொந்துகளை அடைக்க முயலுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

"தி. மு. கழகம், தேர்தலிலே பெற்ற இடங்கள் பதினைந்து தானே என்று பேசப்படுகிறது. பெற்ற இடங்கள் 15 தான்—ஆனால் பெற்ற வாக்குகள், 16 இலட்சம்!

"காங்கிரஸுக்குக் கிடைத்தது — 53 இலட்சம். நமக்குக் கிடைத்தது — 16 இலட்சம்.

"53 இலட்ச ஓட்டுக்கள் பெற்ற காங்கிரசுக்குக் கிடைத்த ஸ்தானங்கள் 150. 16 இலட்சம் பெற்ற நமக்கு, அந்த விகிதாசாரத்தில் 50-ஸ்தானங்கள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் கிடைத்ததோ, 15. அது மட்டுமல்ல, காமராசர்களும், பக்தவத்சலங்களும், மற்றைய அமைச்சர்களும் நம்முடைய சாதாரண ஆட்களைத் தோற்கடித்து சிறு வித்தியாசங்களில் வெற்றிபெற்றார்கள் என்றால், அது அவர்கள் அதிகாரத்திலிருந்துகொண்டே, அதனால் ஏற்படக்கூடிய பலன்களை அனுபவித்துக்கொண்டே — போதாக் குறைக்கு பெரியார் ஈ. வே. ராவையும் அவருடைய பட்டாளத்தையும் துணைக்கு வைத்துக் கொண்டே—பெற்ற வெற்றியாகும். அதிகாரம் மட்டும் அவர்களிடம் இல்லாமலிருந்திருககுமேயானல் அவர்கள் தோற்றிருப்பது நிச்சயம்.

"சட்டசபையில் தி. மு. கழகம் நல்ல எதிர்க் கட்சியாக இயங்கும். எதிர்க் கட்சியாக இருந்து போதிய நன்மைகளைச் செய்ய இயலாமற் போய்விட்டால், இந்த நாட்டு மக்கள் அனைவரும், அடுத்த தேர்தலில் தி. மு. கழகத்தை ஆளுங் கட்சியாக்க வேண்டும். அதற்கு, இப்பொழுதிருந்தே அடுத்த தேர்தலைப்பற்றி எண்ணி ஆவன செய்யவேண்டும்—கழகத்தைப் பலப்படுத்தி கொள்கைகளை பரவச் செய்து வெற்றிபெற வேண்டும்!"

'மத்திய சர்க்கார் நிதி உதவ வேண்டியது கடமையாகும்'

'பாகுபாடுகள் இருப்பது அநியாயம்'

நிதிக் கமிஷனிடம் என். ஜி. ஓ.-வினர் வற்புறுத்தல்

சென்னை, மார்ச் 22—

"சர்க்கார் ஊழியரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த மாநில சர்க்காரின் நிதி நிலைமை இடம் தராவிடில், மாநில சர்க்காருக்கு நிதி உதவி கொடுக்க வேண்டியது மத்திய சர்க்காரின் கடமையாகும்.

"ஐந்தாண்டுத் திட்டங்கள், மாநில, மத்திய சர்க்கார்களின் வருவாய் முழுவதையும் குவித்தே, கூட்டாக அமுல் செய்யப்படுகின்றன.

"எனவே மத்திய மாநில நிர்வாக இயந்திரங்கள் இரண்டும் சமமான பொறுப்பு உடையவைகளே. ஆகவே இவ்விரண்டிற்குமிடையே பாகுபாடுகள் இருக்க முடியாது.

"மத்திய சர்க்காரின் நிதி வருவாய் நிலை தாராளமானதாக இருப்பதாலும், மாநில சர்க்காரின் நிலை அவ்வாறு அமையாததாலும், ஒரே வேலையைச் செய்யும், இருதரப்பாருக்கு இரு வேறுவிதமான சம்பள விகிதங்கள் இருப்பது நியாயமாகாது.

"வாழ்க்கை நடத்தப் போதுமான ஊதியம், சமவேலைக்குச் சமமான சம்பளம் என்ற மத்திய சமிஷன் வகுத்த கோட்பாடுகளை மனதில் கொள்ள வேண்டுகிறோம்."

இவை, நிதிக் கமிஷனிடம், சென்னை மாநில சர்க்கார் ஊழியர் சங்கம் தந்துள்ள மகஜரில் காணப்படுபவையாகும்.

தேர்தலில் ஈடுபடுவோம்; வெற்றி பெறுவோம்!

விடுதலை புரியைக் காணுவோம்!

செட்டி ஜகன் முழக்கம்

பிரிட்டிஷ் கயானாவின் பிரதம ராயிருந்த செட்டி ஜகன், வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளால் நாடுகடத்தப்பட்ட சம்பவம், இரண்டாண்டுகளுக்கு முன் நடந்தது என்றாலும், இன்னும் விடுதலை விரும்பிகளின் பசுமை குன்றாத நினைவில் இருக்கிறது.

அவர், இப்போது இலண்டன் வந்துள்ளார். கானு சுதந்திரம் பெறுவதை யொட்டி, அங்கு நடைபெற்ற விடுதலை விழாவில் கலந்துகொண்டு திரும்பியுள்ள அவர், பிரிட்டிஷ் கயானாவின் விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவர் என்பதும் தெரிந்ததே!

பாடம் பெறுவரா?

"அண்மையில் நிகழ்ந்துள்ள உலக நிகழ்ச்சிகள் பிரிட்டிஷ் கயானாவை 17-ம் நூற்றாண்டுக் கால அரசியல் சட்டத்தால் ஆளலாம் என்ற வெள்ளையரின் எண்ணத்தைக் கைவிடச் செய்ய உதவ வேண்டும். அந்த நிகழ்ச்சிகளிலிருந்து பிரிட்டிஷ் சர்க்கார் பாடம் பெற வேண்டும்,"

என்று, செட்டி ஜகன் முழங்கியிருக்கிறார்.

தேர்தலில் ஈடுபடுவோம்!

பிரிட்டிஷ் கயானாவில் அண்மையில் நடைபெறவிருக்கும் தேர்தலில் ஈடுபடுவோம்; மகத்தான வெற்றி பெறுவோம், என்று தான் நம்புவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

நண்பருடன்......

தன்னுடைய நண்பரான பர்ன்ஹாமுடனும், அவரது புதிய கட்சியுடனும், ஒரு தேர்தல் உடன்பாட்டிற்குவர தாம் விரும்புவதாகவும், பர்ன்ஹாம் இந்த வாரம் லண்டன் வரும்போது அவருடன் இது குறித்துப் பேச விரும்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சிரியாவிற்கு தூதுவர்

தற்போது சிரியாவில் இந்தியாவின் ஸ்தானிக மந்திரியாகப் பதவி வகித்துவரும் சசி குமார் பானர்ஜி, அந்நாட்டில் இந்தியாவின் முதலாவது தூதுவராக இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உண்ணுவிரதம்

கிழக்கு பாகிஸ்தானில் உணவு நெருக்கடிக்கு ஏதாவது ஒரு முடிவு காணும்பொருட்டு மொலானு பாஷானி மே திங்கள் 2-ம் நாள் முதல் உண்ணு நோன்பு மேற்கொள்ளப்போகிறாராம்.

சென்ற ஆண்டு இவர் 16 நாட்கள் உண்ணுநோன்பு இருந்தார்.

‘என் வெற்றியை சட்டங்கள்தான் தோல்வி என்கின்றன’

‘கழகத்திற்குக் கிடைத்த வாக்குகள் காசு கொடுத்து வாங்கப்பட்டதல்ல’

வாக்காளருக்கு திரு. பி. பாலசுப்பிரமணியம் நல்கும் நன்றியும் விளக்கமும்

“நான் இன்று, உங்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக இங்கு வந்தேன் உங்களுக்கு என்றால், எனக்கும் என்னுடைய கட்சிக்கும் ஓட்டுப் போட்ட ஓட்டர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக வந்தேன். அப்படியானால், எதிர்த்து ஓட்டுப் போட்டவர்களுக்கு நன்றி தெரிவிப்பது நாகரீகமல்லவா, என்று நீங்கள் வினவலாம்; உண்மை. அவர்களுக்கும் நான் நன்றி செலுத்தத்தான் வேண்டும்; ஆனால் உயிருடன் இருப்பவர்களுக்குந்தானே என்றால் நன்றி செலுத்த முடியும்! செத்துப்போனவர்களுக்கு காங்கிரஸ்காரர்கள் தேர்தல் காலத்திலே மட்டும் உயிர் கொடுத்து ஓட்டர்களாக்கினார்கள். பிணங்களுக்கு என்றால் எப்படி நன்றி கூறமுடியும் !”

இவ்வாறு தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார்.

22-2-57 மாலை 6½ மணியளவில், சென்னை எழும்பூர் ‘ஒயிட் மெமோரியல் மண்டபத்தில், ‘ராடிகல்லீக்’ சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, தோழர் சே. மு. காதர் வழிமொழிய, பேராசிரியர் எம். இரத்தினசாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள். ‘சண்டே அப்சர்வர்’ ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களும், க. அன்பழகன், அவர்களும், ‘தேர்தலும், அதற்குப் பிறகும்’ என்ற பொருளில் சிறந்த உரையாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின்னர், தோழர் அ. ச. நடராசன் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

தேர்தலுக்குப் பிறகு, நகரில் நடைபெறும் இபக்க சம்பந்தமான முதல் கூட்டமாதலால், கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தார்கள். மண்டபமும் வெளிப்புறமும் தி. மு. கழகக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தலைவர்களின் விளக்க உரைகள், மக்களிடையே ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியை பலப்படுத்துவதாக அமைந்திருந்தது.

தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“முஸ்லீம் லீக் தலைவர் முகமது இஸ்மாயில், அவர்கள் என்னை எதிர்த்து நின்ற எச். டி. ராஜா அய்யருக்கு ஓட்டுப் போடச் சொல்லியிருந்தும், முஸ்லீம்கள் பெருவாரியாக, எனக்கு ஓட்டளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்தவர்களில் கணிசமான அளவுக்கு எனக்கு ஓட்டுப் போட முன்வராததற்குக் காரணம், அவர்களிடத்திலே நான் பங்கு கொண்டுள்ள தி. மு. கழகம் ஒரு நாஸ்திக இயக்கம் என்ற தவறான கருத்து பரப்பப்பட்டதேயாகும். இதை மறுத்து விளக்க எங்களுக்குப் போதுமான பிரசார வசதி இல்லாமலிருந்தது. உண்மையிலேயே நாங்கள்தான் சிறந்த ஆஸ்திகர்கள். மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு ஆண்டவனை பங்காளியாக்காத ஒரு பாவத்தைத் தவிர வேறெந்த பாவமும் நாங்கள் செய்ததாகத் தெரியவில்லை.

“இன்று சட்டப்படி நான் தோற்றுவிட்டிருந்தாலும் கூட, ‘ஆத்மார்த்தி’கமாக நான்தான் வெற்றி பெற்றிருக்கிறேன். நான் பெற்ற வெற்றி பணம் கொடுத்து வாங்கப்பட்ட ஓட்டுகளின் அடிப்படையில் கணக்கெடுக்கப்பட்டதல்ல—மக்களின் அன்பை அளவுகோலாகக் கொண்டு கணிக்கப்பட்டது. நான் தோற்றுப்போன மறுநாள், எனது விரோதிகளால் நான் இறந்துவிட்டேன் என்று ஒரு வதந்தி கிளப்பிவிடப்பட்டது. அது என்னை துன்பத்திலாழ்த்தும் என்று அவர்கள் கருதினார்கள் போலும்! ஆனால் மாறாக, அது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. நான் இறந்துவிட்டால் எனது சவ ஊர்வலத்திற்கு எத்தனை ஆயிரம் மக்கள் வருவார்கள் என்பதை நான் உயிருடன் இருக்கும்போதே—எனது இரு கண்களால் பார்த்தேன்! அழுத கண்களும், சிந்திய மூக்குமாக, ஆயிரமாயிரவர் என் குடில்நோக்கி ஓடிவந்த காட்சி, கன்னெஞ்சையும் இளகச் செய்துவிட்டிருக்கும். என்மீது மக்கள் கொண்டுள்ள மகத்தான அன்புக்கு இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்!

“காங்கிரசார் இதுபோன்ற மிக இழிந்த செயல்களில் இறங்கி சில பல சமூக விரோதிகளின் துணைகொண்டு வெற்றிபெற்றனர். அது எப்படி உண்மையான வெற்றியாக முடியும்!

“தி. மு. கழகம், இந்த தேர்தலில் ஈடுபட்டதால் பெருத்த ஆதரவை ஈட்டியிருக்கிறது என்பது வெள்ளிடைமலை. இதற்கு இந்த வார ‘கல்கி’ இதழே அத்தாட்சி. ஆச்சாரியாரும் என்னுடைய மகத்தான தலைவர் அண்ணாவும் சமீபத்தில் சந்தித்துப் பேசியதைப் பற்றி பலர் பலவிதமாகப் பேசிக்கொள்கிறார்கள். அண்ணாவை, சி. ஆர். விழுங்கிவிடுவார் என்றும் சொல்கிறார்கள். யார் யாரை விழுங்கப் போகிறார் என்பதைப் பொறுத்துப் பார்த்தால் தானே சொல்ல முடியும்.”

★

வடநாட்டில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்த!

டெல்லி மேற்கொள்ளும் மனோவேக நடவடிக்கைகள்!

பல கோடி ரூபாய் கஜானாவிலிருந்து பறக்கிறது!

புதுடில்லி, மார்ச் 22—

ரூர்க்கேலா, பிலாய், துர்காப்பூர் ஆகிய மூன்று உருக்குத் தொழிற்சாலைத் திட்டங்களுக்கும் 1957—58-ம் ஆண்டில் மூலதனச் செலவு வகையில் மொத்தம் ரூ. 156·83 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

நடப்பு நிதி ஆண்டில் இம் மூன்று திட்டங்களுக்கும் மொத்தம் ரூ. 31·6 கோடி செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; இது தவிர ரூர்க்கேலாத் திட்டத்தை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிற, சர்க்காருக்குச் சொந்தமான ‘இந்துஸ்தான் ஸ்டீல் பிரைவேட் லிமிடெட்’ என்னும் ஸ்தாபனத்துக்குக் கடனாக ரூ. 14 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

ரூ. 156 கோடி

அடுத்த ஆண்டு ‘பட்ஜெட்’டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 156·83 கோடியில் ரூர்க்கேலாத் திட்டத்துக்கு மட்டும் சுமார் ரூ. 60கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம். இந்த ஆண்டில் இதற்கு ரூ. 5 கோடி செலவிடப்பட்டது; ரூ. 14 கோடி கடன் தொகை பயன்படுத்தப்பட்டு வருகிறது; உருக்குத் தொழிற்சாலைக்கான பல்வேறு வகை யந்திர சாதனங்களுக்கும் ஜெர்மானிய நிறுவனங்களிடம் ‘ஆர்டர்’கள் கொடுக்கப்பட்டுள்ளன; தொழிற்சாலை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும், நகர்ப்புறப் பகுதியிலும் கட்டட நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றன என்றும் கூறப்பட்டுள்ளது.

பிலாய்

பிலாய் திட்டத்துக்கு 1957-58ல் சுமார் ரூ. 63·33 கோடி செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது; நடப்பு நிதி ஆண்டில் இதற்கு ரூ. 13 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; தொழிற்சாலைக்கும் நகர்ப் பகுதிக்கும் நிலங்கள் வாங்கப்பட்டுவிட்டன; யந்திர சாதனங்கள் ரஷ்யாவிலிருந்து பிலாயுக்கு வந்து சேர ஆரம்பித்துவிட்டன; பல நிரந்தரக் குடியிருப்புக் கட்டடங்களும் அங்கு கட்டப்பட்டுள்ளன; என்றும் விவரம் தரப்படுகிறது.

துர்காபூர்

துர்காப்பூரிலுள்ள மூன்றாவது உருக்குத் தொழிற்சாலைக்கு அடுத்த நிதி ஆண்டில் ரூ. 33.5 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; நடப்பு ஆண்டில் இதற்கு ரூ. 13.6 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்துக்காக 6,000 ஏக்கரா பரப்பளவுள்ள நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. இதற்கான இயந்திர சாதனங்கள் பிரிட்டனிலிருந்து வந்துகொண்டிருக்கின்றனவாம்.

10 இலட்சம் டன்

ஒவ்வொரு உருக்குத் தொழிற்சாலையும் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் டன் வீதம் உருக்குக் கட்டிகள் உற்பத்தி செய்யக் கூடியவையாக இருக்கும்.

நிலக்கரித் தொழிற்சாலை

இத்தொழிற்சாலைகளுக்கு ஆண்டொன்றுக்கு 46 இலட்சம் டன் வீதம் சுத்திகரிக்கப்பட்ட நிலக்கரி ‘சப்ளை’ செய்வதற்காக சர்க்காருக்குச் சொந்தமாக இரண்டு நிலக்கரிச் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்தவும் இரும்பு உருக்கு மந்திரி அலுவலகம் முடிவு செய்திருக்கிறதாம். தனியார் துறையில் ஏற்கனவே அநேக நிலக்கரிச் சுத்திகரிப்பு நிலையங்கள் வேலை செய்து வருகின்றன; சர்க்காருக்குச் சொந்தமான நிலக்கரிச் சுத்திகரிப்பு நிலையமொன்று கர்காலியில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 1959—60 கடைசிவாக்கில், நாட்டிலுள்ள உருக்குத் தொழிற்சாலைகளுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு கோடி டன் வீதம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு நிலக்கரிச் சுத்திகரிப்புச் சாலைகளுக்கும் 1957—58-ல் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; இவைகளுக்கு மொத்தம் ரூ. 5 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் பெருமிதத்தோடு டெல்லி சர்க்கார் அறிவிக்கிறது.

புதுவை விவகாரம்

மக்கள்சபையில் விளக்கம்

புதுடில்லி, மார்ச் 24—

பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருந்துவந்த புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனம்—ஆகிய பகுதிகள் இந்தியாவுடன் இணைவதை எதிர்த்துள்ள பிரெஞ்சு யூனியன் குழுவிற்கு ஆலோசனை கூறும் அளவிற்கே அதிகாரம் உள்ளது என்றும், மற்றபடி எந்த அதிகாரமும் அந்த குழுவிற்கு இல்லை என்றும் வெளிநாட்டு அமைச்சர் சந்தா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

கைதியின் ஆவேசம்

ஐதராபாத், மார்ச் 22—

விசாரணைக் கைதி ஒருவர், நீதிமன்ற பாதுகாப்பிற்கு அழைத்துச் செல்லும்போது, வராந்தாவில் நின்றுகொண்டிருந்த ஒரு போலீஸ் அதிகாரியின் முகத்தில் ஆவேசத்தோடு 3 குத்துகள்விட்டாராம்.

ஏற்கனவே அவர்மீது போடப்பட்டிருந்த வழக்கோடு, அதிகாரியைத் தாக்கியதற்கான ஒரு புது வழக்கும் போடப்பட்டிருக்கிறதாம்.

‘தி. மு. கழகம் ஒரு மக்கள் இயக்கம்’

‘தேர்தல் இந்த உண்மையை நிரூபித்துவிட்டது’

‘கழக இதழ்களுக்கு ஆதரவு நல்குவீர்’

பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் கருத்துரை

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் பேசியதாவது :—

“இன்கு இங்கு, தேர்தலிலே வெற்றிபெற்ற ஒருவரும் தோற்ற ஒருவரும் விளக்கவுரை அளிப்பதற்காக வந்திருக்கிறார்கள். சாதாரணமாக தேர்தலிலே தோற்றுவிட்டால், மூலை தேடி முடங்கிக் கொள்வதுதான் வழக்கம். ஆனால் நம்முடைய மதிப்புக்குரிய ‘சண்டே அப்சர்வர்’ ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், அப்படிப் பதுங்கிக்கொள்ளாமல், மக்களிடையே வந்து தனது தோல்விக்கான காரணங்களை எடுத்துச்சொல்ல இருக்கிறார். வெற்றி பெற்ற திரு. க. அன்பழகன் அவர்களும், ‘வெற்றிபெற்றுவிட்டோமே—இனி மக்களைப் பற்றி நமக்கென்ன கவலை’ என்று கொள்ளாமல் பணபலம், அதிகார பலம் பொருந்திய ஒரு ஸ்தாபனத்தை எதிர்த்துப்பெற்ற வெற்றிக்கு மக்களுக்கு நன்றி செலுத்த வந்திருக்கிறார். இது ஒன்றே போதும், தி. மு. கழகம், மக்களுடன் நெருங்கிய—நேரடித் தொடர்பு பெற்ற கழகம் என்று கொள்ளுவதற்கு. காங்கிரசை வானளாவப் புகழ்ந்து, மற்றைய கட்சிகளைத் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டவர்கள், காங்கிரஸ் ஒன்றுதான் ‘மக்கள் இயக்கம்’ என்றும், மற்றைய இயக்கங்களெல்லாம், ஒரு குறிப்பிட்ட சாராருக்காக மட்டுமே பாடுபடக்கூடியவை என்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால், அந்த ‘மக்கள் இயக்கம்’ என்று சொல்லப்படுகிற காங்கிரசை, உண்மையிலேயே மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே எதிர்த்து கணிசமான அளவு வாக்குகளைப் பெற்றுள்ளது”

முடிவுரையாற்றுகையில் அவர், தி. மு. கழகப் பத்திரிகைகளை மக்கள் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார், ‘சண்டே அப்சர்வர்’ இதழை ஆங்கிலம் அறிந்தவர்களும், கட்சியின் தினசரியான ‘நம் நாடு’ இதழை அனைவரும் கட்டாயம் வாங்கவேண்டும். கட்சியுடன் நேரடித் தொடர்பை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நன்றி அறிவிப்பு

பொதுத் தேர்தலில், பெரம்பூர் தனித் தொகுதி தி. மு. க. அபேட்சகராகப் போட்டியிட்ட எனக்கு நீங்கள் காட்டிய மகத்தான ஆதரவும் — ஊட்டிய இலட்சிய ஆர்வமும் எனது இதயத்தில் அழியாத சம்பவமாக—மறையாத இன்ப வடுவாகப் பதிந்துவிட்டது.

27,638 வாக்குகள் பெற்று நான் அடைந்த வெற்றி எனது தனிப்பட்ட வெற்றியல்ல; பொதுமக்களாகிய உங்களின் வெற்றியாகும். தி. மு. கழகத்திற்கு நீங்கள் தந்த வெற்றிக் கேடயமாகும்.

மிகவும் குறைபாடுகள் மலிந்த நமது தொகுதியை சீர்படுத்த நான் செய்யவேண்டிய பணிகளைச் சொல்லி, கடமைப் பாதையில் என்னை நடத்திச் செல்லுமாறு உங்களை பணிவன்பாக வேண்டுகிறேன். மக்களின் வாக்குகளைப் பெற்ற நான், ஆட்சி மன்றத்தில் தி. மு. க. அணியில் நின்று ஜனநாயகக் குரல் கொடுப்பதோடு - தொகுதி நலனுக்காக எல்லாவித பணிகளையும் செய்ய முன்னோடியாகக் காத்து நிற்கிறேன்.

பொதுவாக பொதுமக்களுக்கும், குறிப்பாக தொழிலாளர்களுக்கும், சிறப்பாக தாய்மார்களுக்கும் என் உளம் நிறைந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கிறேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு—இம் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு இலட்சியப் பிடிப்போடு பணியாற்றிய தி. மு. க. தோழர்களுக்கும் எனது இதயமார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறேன். வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

அன்புள்ள,
சத்தியவாணிமுத்து

★

வணக்கம். 8—3—57-ல் நடைபெற்ற சென்னை சட்டசபைத் தேர்தலில் கள்ளக்குறிச்சித் தொகுதியிலிருந்து எங்களை வெற்றிபெறச் செய்ய, பாடுபட்ட பெரியோர்களுக்கும், கூட்டு கழகத் தோழர்களுக்கும், வாக்காளர் பெருமக்களுக்கும் எங்கள் நன்றிகலந்த வணக்கத்தை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

எங்கள் வெற்றி அறிந்து தங்கள் பாராட்டுதலை தந்தி, கடிதம் மூலம் தெரிவித்த நண்பர்களுக்கும், தோழர்களுக்கும் எங்கள் நன்றியை உரிமையாக்குகிறோம்.

தொகுதி மக்களின் வாழ்க்கை வளத்திற்காக என்றும்போல் இனியும் சிறப்புற செயலாற்றுவோம் என உறுதி கூறுகிறோம்.

அன்பன்
சி. நடராசன்
எம். ஆனந்தன்

ஆசிரியருக்குக் கடிதம்:

பெரும்பான்மை பலம் இருப்பதாகப் பெருமை பேசுவோர்

ஆட்சிப் பொறுப்பேற்கத் தயங்குவதேன்?

பி. சோ. கட்சியைத் துணைக்கு அழைப்பது எதற்காக?

கூடிக்குடி கெடுக்கவா? பழியில் பங்குதரவா?

ஐயா,

கம்யூனிஸ்டு கட்சியின் 'பொலிட் பீரோ'வினர், கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் அமைக்கும், சர்க்காரில் பங்கு பெற வருமாறு பி. சோ. கட்சியினரை அழைத்திருப்பதன் காரணம் என்ன?

தங்களுக்கு, 5 சுயேச்சைகளின் மனப்பூர்வமான ஆதரவையும் சேர்த்தால் நிலையான மந்திரி சபை அமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மை பலம் இருப்பதாக, பெருமை பேசும் அதே நேரத்தில், பி. சோ. கட்சியினரையும் ஆட்சிப் பொறுப்பில் பங்கேற்க வருமாறு அழைப்பது எதற்காக?

இந்த நிலையை, ஆட்சிப் பொறுப்பைத் தனிமையில் ஏற்க தயங்குகின்றனர் கம்யூனிஸ்டுகள் என்று விமர்சித்தால் அதில் தவறென்ன?

கம்யூனிஸ்டுகள், கேரளத்தில் ஆட்சிப் பொறுப்பேற்பதின் மூலம், எந்தவித அற்புதங்களையும் செய்யமுடியாது என்று அவர்களில் சிலர் கருதுவது தான் இந்த அழைப்பிற்குக் காரணமா?

தங்களால் தீவிரமான எதுவும் செய்யமுடியாது, என்ற உண்மையை உணர்ந்திருப்பதால், தங்களோடு சேர்ந்து பி. சோ. கட்சியினரும், பின்னால் அனுபவிக்கப் போகும் பழிக்கு ஆளாகட்டும் என்று கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்களா?

டில்லி எல்லாம்வல்ல இறைவனாயிருக்கும் வரையில்—மாநிலங்களின் நிலை வெறும் 'ஆடும் பதுமை'களின் நிலையையொத்ததாக இருக்கும் வரையில், ஆள் மாற்றம் மட்டும் எதையும் செய்யமுடியாது என்பதை, உணர்ந்து இந்த நிலையை பிறிதோர் காலத்தில் தங்களின் இயலாமைக்குக் காரணமாகக் கூறும்போது, பி. சோ. கட்சியினரின் குரலும் சான்றாகக் கிடைக்கட்டும் என்று கருதுகிறார்களா கம்யூனிஸ்டுகள்?

அல்லது வழக்கம்போல, 'கூடிக் குடி கெடுக்கும்' நோக்கத்துடன்தான், கம்யூனிஸ்டுகள் பி. சோ.-க்களுக்கு இந்த ஆசைவார்த்தை காட்டியுள்ளனரா?

எதற்காக தங்களுக்கு பெரும்பான்மை பலம் இருப்பதாகக் கூறும் அதே நேரத்தில், சர்க்காரில் பங்குபெற வருமாறு பி. சோ.-க்களை அழைக்க வேண்டும் இந்தக் கம்யூனிஸ்டுகள் என்பது தெரியவில்லை இப்போது தெரியக்கூடும் போகப்போக.

அன்புள்ள
கமலப்பிரியன்
சென்னை: 25—3—57

தப்பிவிட்ட மந்திரியாரின் தவருன போக்கு!

கழகத்தவரைப் பழிவாங்கும் காங்கிரசாரின் இழிசெயல்

சென்னை, மார்ச் 22—

அமைச்சர் பக்தவத்சலனாரின் தொகுதியான ஸ்ரீபெரும்புதூரிலுள்ள காட்டுப்பாக்கம் கிராமத்தில், காங்கிரசுக்காரர்கள் நமது தோழர்களை பழிவாங்கும் நோக்கத்தோடு 'காட்டுமிராண்டி'ச் செயல்களில் இறங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

காட்டுப்பாக்கம் தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் அரங்கநாதன் ஒரு சிற்றுண்டிச்சாலை நடத்திவருகிறார். அவர் தன்னுடைய கடையில் கழகத் தலைவர்களின் படங்களையும், கழகக் கொடியை கடையில் கட்டியும் தனது ஆர்வத்தைக் காட்டியுள்ளார்.

இதைக் காணச் சகிக்காத இக்கிராம பெரியதனக்காரர் என்று கூறப்படும் கோவிந்தராசு நாயக்கர் என்பவர் ஊரைக்கூட்டி, தோழர் அரங்கநாதன் தனது சிற்றுண்டி விடுதியை மூடிவிட வேண்டுமென்றும் அல்லது அவருடைய விடுதிக்குச் செல்லும் மக்கள் சாப்பிட்ட பிறகு பணம் கொடுக்காமல் வரவேண்டுமென்றும் 'கட்டளை' பிறப்பித்தாராம்.

மேற்கண்ட இழிக்குணம் கொண்டவர், அடியாட்களை விட்டு சாப்பிட்ட பின் பணம் தராது வரச்செய்தும், நமது தோழரை அடிப்பதாக மிரட்டியும்—பயமுறுத்தியும் சிற்றுண்டி விடுதியைமூடி அவ்வூரில் வாழ முடியாநிலை உண்டாக்கி விட்டாராம். நமது தோழர் தன்னை அடிப்பதாக மிரட்டிப் பயமுறுத்துவதைப் பூந்தமல்லி போலீசாரிடம் முறையிட்டுள்ளார்.

இந்த இழிசெயல்களுக்குக் காரணம், இக்கிராமத்தில் காங்கிரஸ்காரர்களைவிட நமது அபேட்சகர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களுக்கு அதிக வாக்குகள்கிடைத்ததே காரணமாம்.

இப்பண்பற்றச் செயல்களை செய்வதற்கு, அமைச்சர் பக்தவத்சலனார் துணை நிற்பதாக ஊர் மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

ஆட்சிப் பொறுப்பில் பங்கேற்க!

பி. சோ. கட்சிக்கு கம்யூனிஸ்டுகள் அழைப்பு

கேரளத்தில் மந்திரிசபை அமைப்புக் குறித்து 'பொலிட் பீரோ' முடிவு

எர்ணுகுளம், மார்ச் 24—

கேரளத்தில் நாங்கள் அமைக்கப்போகும் சர்க்காரில் பங்கு பெற வருமாறு, பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியினரை, 'பொலிட்பீரோ' தீர்மானம் மூலம், கம்யூனிஸ்டுக் கட்சியினர் அழைத்திருக்கிறார்களாம்.

பி. சோ. கட்சியின் நிர்வாகக் குழுவினர், இந்த அழைப்பு குறித்து முடிவு கூறுமாறு கேட்கப்பட்டிருக்கின்றனராம்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் 'பொலிட்பீரோ' கூட்டம், கடந்த மூன்று நாட்களாக, கேரள அரசியல் குறித்து விவாதித்துவிட்டு, இந்த முடிவை மேற்கொண்டிருக்கிறதாம்.

வெற்றி தேடித்தந்த மக்களுக்கு நன்றி தெரிவித்திருப்பதுடன், தங்களிடம் மக்கள் சுமத்தியுள்ள நம்பிக்கையையும், தாங்கள் உணர்ந்திருப்பதாக தீர்மானம் கூறுகிறது.

கேரளத்தில் கம்யூனிஸ்டு ஆட்சி மூலம் மக்களின் வாழ்வில் புதிய தோர் திருப்பத்தைக் காண எல்லாக் கட்சியினரும், தனிப்பட்டோரும் ஒத்துழைப்பு நல்குமாறும் தீர்மானம் கூறுகிறது.

பி. சோ. தலைவர் கருத்து

தனது கட்சிக்கு கம்யூனிஸ்டுகள் விடுத்துள்ள அழைப்பு குறித்து, பி. சோ. கட்சித் தலைவரான பட்டம் தாணுப் பிள்ளை, கருத்தறிவிக்கையில் 'கம்யூனிஸ்டுகளின் இந்த வலையில் நாம் விழுந்துவிடக் கூடாது, இந்த அழைப்பை ஏற்கக்கூடாது,' என்றும் கூறியுள்ளார்.

மேலும், கம்யூனிஸ்டுகளின் இந்த அழைப்பு குறித்து, பி. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் கமிட்டியே இறுதியான முடிவு எடுக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தலைவர் யார்!

கேரள கம்யூனிஸ்டு சர்க்காரின் தலைவராக, இ. எம். எஸ். நம்பூதிரிபாத் இருப்பார் என்றும், 'பொலிட் பீரோ' இந்த முடிவையே மேற்கொண்டிருப்பதாகவும், கேரள கம்யூனிஸ்டு சட்டசபை உறுப்பினர்கள் ஒன்றுகூடி, நம்பூதிரிபாதே தலைவர் என்று கூறியதும் முடிவு பகிரங்கப்படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

அண்ணா மற்றும் வெற்றிபெற்றோருக்குப் பாராட்டு

26-3-57 மாலை 5-மணிக்கு மாணம்பதி பஞ்சாயத்து போர்டு பாராட்டுக் குழுவின் சார்பில், மேற்படி பஞ்சாயத்து போர்டு எதிரில் தோழர் அ. க. தங்கவேலர் தலைமையில் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற அண்ணா அவர்களையும், மற்றும் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, என். சிவராஜ், இரா. தருமலிங்கம், எஸ். எம். அண்ணாமலை, வி. கே. இராமசாமி, கல்லப்பன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோரைப் பாராட்டி தோழர் க. அறிவழகன் அவர்களும் மற்றும் பலரும் பேசுவார்கள். மாலை 4 மணியளவில் ஓர் ஊர்வலமும் நடைபெறும்.

உடன்பாடு!

கெய்ரோ, மார்ச் 24—

சூயஸ் கால்வாய் பற்றிய தகராறில் தீர்வு காண்பதற்கு, எகிப்திய அரசினருக்கும் ஐ. நா. பொதுச்செயலாளர் ஹாமர்ஷீல்டுக்குமிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

★

பெர்முடா, மார்ச் 24—

பிரிட்டிஷ் முதலமைச்சர் மாக்மில்லன், கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், சூயஸ்கால்வாய் பற்றி, பின்பற்றவேண்டிய நீண்ட—குறுகிய கால செயல் முறைகளில் தமக்கும் ஐசன்ஹவருக்கு உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக தெரிவித்திருக்கிறார்.

ஆட்டிவைப்போர் வடக்கே ஆடும் பதுமைகள் தெற்கே

கேரள கம்யூனிஸ்டு செய்யப்போவது என்ன?

கேரளத்தில் ஒரு கம்யூனிஸ்டு சர்க்காரால் ஏதாவது செய்ய முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதேயாகும்—என்று சோஷலிஸ்டுத் தலைவர் டாக்டர் லோகியா கூறியிருக்கிறார்.

பி.சோ.-வின் சோக முடிவு

"கேரளத்தில், பி. சோ. கட்சி கொஞ்சகாலம் ஆட்சியிலிருந்தது. ஆனால், கடைசியில் மக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு, சோக முடிவைப் பெற்றுக்கொண்டுவிட்டது.

கம்யூனிஸ்டு

"இன்று, கம்யூனிஸ்டுக் கட்சி இரண்டுங்கெட்டான் நிலையிலிருக்கிறது. ஒருபுறம் பாட்சிகரமான திட்டங்கள் இருக்கின்றன; மறுபுறம் மத்திய சர்க்கார் ஆட்டுவிக்கிறபடி ஆட வேண்டிய நிலை இருக்கிறது. இவை இரண்டிற்கிடையேயும் ஏதாவது ஒரு வழியைப் பின்பற்றியாக வேண்டும். என்ன செய்யப்போகிறார்கள் என்பதைப் பொறுத்துப் பார்க்கலாம்,"

என்று டாக்டர் லோகியா ஐதராபாத் நகரப் பொதுக்கூட்டம் ஒன்றில் கூறியிருக்கிறார்.

★

பிடிப்பு தளர்கிறது; செல்வாக்கு சரிகிறது

காங்கிரஸ் பற்றி லோகியா

ஐதராபாத் நகரப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் சோஷலிஸ்டுத்தலைவர் லோகியா, காங்கிரஸ், மக்களிடம் வைத்திருந்த 'பிடிப்பு' தளர்ந்து வருகிறது—செல்வாக்கு சரிந்து வருகிறது என்று கூறியிருக்கிறார்.

"கேரளத்திலும் ஒரிசாவிலும் காங்கிரஸ் மந்திரி சபை அமைக்க முடியாத நிலை தோன்றியிருப்பதே இதற்குப் போதுமான சான்றாகும்.

"நாற்பதாண்டு காலத்தில் 85 சதவிகித வாக்குகள் பெற்றுவந்த காங்கிரஸ், இப்போது 49 சதவிகித வாக்குகளே பெறமுடிகிறது.

"இதுவும் காங்கிரஸ் சரிந்து வருகிறது என்பதற்கு மற்றுமொரு சான்றாகும்"

என்றும், அவர் கூறியிருக்கிறார்.

வெற்றி ஊர்வலம்

27—3—57 மாலை 6-மணிக்கு சென்னை — ரேப்பியர் பார்க் (29-வது வட்டம்) தி. மு. கழகக் கிளையின் சார்பில், சென்னை எழும்பூர் தொகுதியில் வெற்றிபெற்ற தோழர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டி ஓர் ஊர்வலம் நடைபெறும். மாலை 5-மணிக்கு சிறுவர்களுக்குப் பால் வழங்கப்படும்.

சேர்வராயன் மலையில் கிடைக்கும் அலுமினியத் தாதுக்களைப் பயன்படுத்திக்கொண்டு முடிந்தவரையில் உற்பத்தியைத் துவங்க, மேட்டூரில் விரைவில் ஓர் ஆலை நிறுவப்பட வேண்டுமென 'அலுமினியம் குழு' யோசனை கூறியுள்ளது. இவ்வாலை 10,000 டன் உற்பத்தி செய்யும் சக்தியுள்ளதாயிருக்கும்.

★

'கம்யூனிஸ்டுகளாக இருக்க மாட்டார்கள்'

பெவான் கருத்து

பம்பாய் வந்துசேர்ந்த பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் பெவானிடம், கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் வெற்றிபெற்றது குறித்துக் கேட்கப்பட்டபோது அவர் கூறியதாவது:—

"ஆட்சிப் பொறுப்பேற்று, ஒரு ஜனநாயகப் பிரதிநிதித்துவ சர்க்காராக, கம்யூனிஸ்டு கட்சி செயல்படுமானால், அது, கம்யூனிஸ்டு கட்சி என்ற சொல்லுக்குரிய பொருள்படும் கம்யூனிஸ்டு கட்சியாக இருக்கமுடியாது; கம்யூனிஸ்டு 'லேபிள்' கொண்ட ஒரு சோஷலிஸ்டு கட்சியாகவே இருக்கும்"

உடுமலையில்

அண்ணா, மதியழகன்

2—4—57 அன்று மாலை உடுமலையில் நடைபெறும் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களும் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் சொற்பொழிவாற்றுவர்.

டெல்லியில்

போலந்துப் பிரதமர் குழு

போலந்து நாட்டுப் பிரதமர் ஜோசப் சிரன்கிவிச் மற்றும் அவரது மனைவி, குழுவினர்க்கு டெல்லி பாலம் விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டிருக்கிறது.

பத்து நாட்கள், இந்தியாவில் தங்குவதற்காக வந்துள்ள போலந்து பிரதமர் குழுவினர், இன்று பண்டிதருடன் பேச்சுவார்த்தைகளைத் துவங்குவர் என்று தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.